கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினரே, ஐந்து லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் கொடுக்கலாமே!

திரு, இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியைப் பிற மாநிலங்களில் பரப்புவதற்கான வகையில் இந்திய சர்க்கார் ஏதாவது நிதி ஒதுக்கி வைத்திருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர் சம்பளம் போன்றவற்றுக்கு எல்லாம் மத்திய சர்க்கார் மானியம் அளித்துக் கொண்டு வருகிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அளித்த விடையில், ஆசிரியர்களுக்குக் கொடுப்ப தற்கு மத்திய சர்க்கார் மான்யம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆசிரியர்களுக்கு என்று சொல்லும்போது, தமிழ் ஆசிரியர்களுக்கு மட்டுமே அல்லாமல், மற்ற துறைகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் செலவிடப் படும்போது, அது எப்படி தமிழ் வளர்ச்சிக்கு உரியதாகும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் ஆசிரியர்களை வைத்து, தமிழ் பேசப்படாத பிராந்தியங்களில் தமிழ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்தி பேசப்படாத பிராந்தியங்களில் இந்தி சொல்லிக் கொடுப்பதற்கு இந்தி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் மத்திய அரசாங் கம் உதவுகிறது. அந்த வகையிலே தான் நான் கூறினேன். தமிழ் பேசப்படாத பிராந்தியங்களில் தமிழ் சொல்லிக் கொடுக்க நியமிக்கப்படும் ஆசிரியர்களுடைய சம்பளங்கள் போன்றவை எல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்று சொன்னேன்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, தமிழ் பேசப்படாத மாநிலங்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்க மானியம் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். எந்த எந்த மாநிலங்களுக்கு அவ்வாறு வழங்கப் படுகிறது. தமிழ் நாட்டார் குடியேறியிருக்கிற பிரதேசங்களுக்கு மட்டும் அவ்வாறு வழங்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் பேசப்படாத பகுதிகளில் தமிழைக் கற்றுக்கொடுக்க மானியம் வழங்கப்படுகிறது என்று கூறினேன். எந்தெந்த மாநிலத்தில் அவ்வாறு செலவிடப்படுகிறது என்கிற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தி மொழியை இந்த மாநிலத்தில் பரப்ப மத்திய அரசாங்கத்தார் நிதி ஒதுக்குகிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு நிதி அவ்வாறு ஒதுக்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

நாரணம்மாள்புரம் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம்.

*287 கேள்வி—**திரு. ஆர் எஸ். ஆறுமுகம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நாரணம்மாள் புரம் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம் (நெ. 02034) சர்க் காருக்கு அனுப்பிய கடன் மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தாழையூத்து நாரணம்மாள்புரம் கூட்டுறவுக் கட்டிடச் சங்கம் ஸ்ரீ V. S. M. மகமது அலியாருக்காக ரூ. 4,000-ம், திருமதி எஸ். சங்கரம்மாளுக்காக ரூ. 3,250-ம் கோரி அனுப்பிய கடன் மனுக்கள் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்குக் கிடைத்தன. தேசீய நெருக்கடி காரணமாகப் புதிய கடன்கள் கொடுப்பதற்குத் தடை விதித்திருப்பதால், இக் கடன் மனுக்களை அனுமதிக்க முடியவில்லை. ஆனால், ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து பெற்ற நிதியில் ரூ. 6 லட்சம் குறைந்த வரு

17th March 1964]

மானத் தொகுதியினருக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதால், திருமதி எஸ். சங்கரம்மாளுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டது. ஆனால், இன்னொரு கடன் மனுவில் சட்டப்படியும், மற்ற வகையிலும் குறைபாடு கள் இருந்ததால், அது திருநெல்வேலி துணைப் பதிவாளருக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

ரோடுகள் பராமரிப்பு

*288 கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப்பதில ளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம், வானூர் போன்ற பஞ்சா யத்து யூனியனின் மேற்பார்வையிலுள்ள யூனியன் ரோடுகளைச் சர்க்கார் கண்காணிப்பில் எடுத்துகொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : Only such of the Panchayat Union roads as are bus route roads are proposed to be taken over by Government on a phased programme subject to availability of funds.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் சொன்னார்கள். தமிழில் சொல்லவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பஸ்ரூட் சாலைகளாயுள்ள பஞ்சா யத்து யூனியன் சாலைகளை மட்டும் அரசாங்கம், நிதிவசதிக்கேற்ப, படிப்படி யாக எடுத்துக் கொள்ள உத்தேசிக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நான்கைந்து ஆண்டுகளாகவே யூனியனிலே அந்த ரோடுகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இந்தப் பிற்போக்குப் பகுதியை சர்க்கார் பரிசீலனை செய்து சர்க்காரிலேயே எடுத்து நடத்த முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கத்தின் கொள்கையைத்தான் சற்று முன்பு சொன்னேன். நிதி வசதிக்குத் தகுந்த முறையில் எந்த எந்த ரோடுகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் அமைச்சர் அவர்கள் சொல் கிறது எனக்குத் தெரிகிறது. இது மிகவும் பிற்போக்குப் பகுதியாக இருப்பதனால் இதற்குப் பிரதான சலுகை கொடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கிற கொள்கையை மாற்றுவதாக இல்லை.

பின்தங்கிய சமூகங்களின் பட்டியல்

* 289 கேள்வி—**திரு. டி. கடம்பவனசுந்தரம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பின் தங்கிய சமூகங்கள் பட்டியலை, சமீபகால முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு மாற்றுப் பட்டியல் தயாரிக்க சர்க்காருக்கு உத்தேச முண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, எந்த எந்த மாவட்டங் களில் எந்த எந்த பின் தங்கிய வகுப்பார்கள் இருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறதா ? இருந்தால் அதை ரெவின்யூ அதிகாரிகளுக்கு சர்க்கார் அனுப்பி வைக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் பின் தங்கிய வகுப்பினர் என்பதற்கு ஒரு பட்டியல் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் மாவட்டங்களில் உள்ள ரெவின்யூ அதிகாரிகள் செயல்படுகிறார்கள்.